| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>வண்ணமணி | IA.3/23 in OS.386/11 | 30.08.2023 |

**PW2 குறுக்கு விசாரணை**

மனுதாரர் எதற்காக இந்த மனுவை தாக்கல் செய்தார் என்றால் பாகப்பரிவினைக்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். 02.12.2019 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு பற்றி எனக்கு தெரியாது. விஜயலெட்சுமியின் கணவர் எந்த நோயால் பாதிக்கப்பட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது., அவர் இறந்தது தான் எனக்கு தெரியும். அந்த நிகழ்வுக்கு நான் சென்றிருந்தேன். ஆறுமுகம் இறக்கும் போது அவருக்கு சுமார் 65 வயது இருக்கும். இறந்து 2 வருடம் ஆகிறது. ஆறுமுகம் வயதுமுதிர்வின் காரணமாக இறந்தாரா என்றால் உடல்நிலை மற்றும் மனப்பிரச்சனை காரணமாக இறந்தார். அவருக்கு 3 வருடகாலமாக பிரச்சனை இருந்தது. எனக்கும், முருகானந்தத்திற்கும் 10 வருமாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் அவருக்கும் எனக்கும் ஒரு வருடமாக தான் பிரச்சனை இருந்து வருகிறது. நான் விஜயலெட்சுமியின் நிலத்தில் 15 வருடமாக குத்தகைதாரராக இருப்பதற்கு எழுத்துமூலமான ஆதரவு உள்ளதா என்றால் உள்ளது. 3 வருடத்திற்கு ஒரு முறை எழுதிதருவார்கள். அவ்வாறு எழுத்துமூலமாக கொடுக்கப்பட்ட ஆதரவை நான் எனது பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யாததற்கு காரணம் உண்டா என்றால் எனக்கும் அவருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்பதால் நான் எப்படி தாக்கல் செய்வேன். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபடி சாகுபடி செய்யவில்லை என்றும், வழக்கிற்காக சாகுபடி செய்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் சிறு,குறு விவசாயிகளுக்கான

அடையாள அட்டை உள்ளதா என்றால் இல்லை. 100 நாள் வேலைக்கு நான் செல்லவில்லை. விவசாய கூலி வேலைக்கு சென்று வருவேன். எனக்கு விவசாய கூலி வேலை தான் தெரியும் என்றும், நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் சாகுபடி செய்யவில்லை என்பதால் தான் எனக்கு விவசாயிக்கான அடையாள அட்டை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வேளாண்மையில் விவசாயத்திற்கு பசலி ஆண்டு என குறிப்பிட்டு சொல்வார்கள் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. முருகானந்தம் மிரட்டியதாக சொல்வது சம்மந்தமாக காவல் துறையில் நான் புகார் கொடுக்கவில்லை. ஒரு வருடமாக முருகானந்தத்திடம் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை என்பதால் அவர் என்னை மிரட்டியதாக சொல்வது பொய் என்றும், நான் மனுதாரருக்கு ஆதரவு சேர்க்கவேண்டும் என்பதற்காக பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் வாழை சாகுபடி செய்யவில்லை என்றால் சரியல்ல. வாழை போட்டு 6 மாதம் ஆகிறது. வாழை சாகுபடி செய்ததற்கான அடங்கல் ஆவணத்தை கிராம நிர்வாக அலுவரிடம் பெற்று நீதிமன்றதத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் பிரச்சனையாக உள்ளதால் தாக்கல் செய்யவில்லை. நான் சாகுபடியில் இல்லாததால் தான் அடங்கல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நடவடிக்கை சம்மந்தமாக விஜயலெட்சுமி மண்ணச்சநல்லூர் சார்பதிவத்தில் ஆஜர் ஆனது பற்றியும் மேற்படி சார்பதிவகத்தில் ஏற்பட்ட உத்தரவு பற்றியும் எனக்கு தெரியாது. விஜயலெட்சுமி கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல என்னிடம் பிரச்சனை செய்ததால் நான் மனு கொடுத்து

சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விஜயலெட்சுமி யாரை வழக்கறிஞராக நியமித்துள்ளார் என்று விஜயலெட்சுமி சொல்லி எனக்கு தெரியும். பரிமளா மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் சாகுபடி சம்மந்தமாக சாட்சியம் அளிக்கும்படியும் விஜயலெட்சுமி என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை. நான் தான் மனு கொடுத்தேன். விஜயலெட்சுமியை 25 வருடமாக எனக்கு தெரியும். விஜயலெட்சுமி எனக்கு 25 வருடமாக எனக்கு தெரியும் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒருதலைபட்ச உத்தரவு சம்மந்தமாக சாட்சியம்அளிக்காமல் அசல் வழக்கின் பொருண்மை பற்றி நான் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.